[12th February 1958

Teachers appointed after 1933.

* 54 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state the reasons for not sanctioning the same rates of basic pay, special additional pay and other allowances to the teachers appointed after 1933 as are admissible to the teachers appointed before 1933?

THE HON. SRI C. SUBRAMANIAM : The scales of pay and allowances allowed to teachers and other employees of Government, appointed prior to 1933, were reduced in April of that year in keeping with the comparatively low cost of living prevailing then. This accounts for the grant of reduced scales for the teachers appointed after 13th April 1933. But from January 1947, the scales of pay of all Government servants including teachers, were increased.

SRI A. GOVINDASAMY : 1933-க்கு முன்பு வேலைக்கு அமர்த்தப் பட்ட ஆசிரியர்கள் மெடிகல் லீவ் எடுக்கும்போது அவர்களுக்கு முழுச் சம்பளத்தோடு, ஸ்பெஷல் பே, மற்ற அலவன்ஸ் கிடைக்கின்றன. ஆனால் 1933-க்குப் பின்னால் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு இந்த ஸ்பெஷல் பே கிடைப்பதில்லை. முழுச் சம்பளமும் கிடைப்பதில்லை. இம்மாதிரி வித்தியாசம் இல்லாமல் ஒரே விதமான சம்பளம், அலவன்ஸ் விகிதம் கொடுக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது தனிப் பிரச்னை. அவர் கள் சொல்லியிருக்கக்கூடியதை நான் பரிசீலனை செய்து பார்க்கிறேன்.

SRI A. GOVINDASAMY : ஸ்பெஷல் அடிஷனல் பே என்று கொடுக் கும் ஐந்து ரூபாயை அடிப்படைச் சம்பளத்தோடு சேர்த்து உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உபாத்தியாயர்களுக்கு ஸ்பெஷல் அடிஷனல் பே ஐந்து ரூபாயும், கிராக்கிப்படி ஏழு ரூபாயும் கொடுக்கப் பட்டிருக்கிறது. சம்பள விகிதத்தை எப்படி அமைக்கவேண்டுமென்று சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

Flood Relief.

* 55 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received any grant from the Centre for flood relief during 1957?

THE HON. SRI M. A. MANICKAVELU : No grant has so far been received from the Government of India towards the expenditure incurred by this State on *flood* relief during 1957.

SRI N. K. PALANISAMI : பாக்கி மாகாணங்களுக்கும் கேரள ராஜ் யத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறமாதிரி நம் சர்க்காரும் இதைப்பற்றி வெள்ள நிவாரணத்திற்காக மத்திய சர்க்காரின் உதவியைக் கேட்டார்களா ? அல்லது அவர்களைக் கேட்டும் கொடுக்க மறுத்தார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வெள்ளச் சேதாரம் 1957-ம் ஆண்டிலே ஒன்றும் பிரமாதமாக இல்லை. அதற்கு முன் புயல் சேதாரம் நிறைய இருந்தது. அதற்காக கோடிக் கணக்கில் மத்திய சர்க்காரிலிருந்து உதவி பெறப்பட்டது.